2003 ஏப்ரல் 8]

கும்பகோணத்திற்கும் இடையே ஓடிய அரசு நகரப் பேருந்தை -- நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது -- பொதுமக்கள், மாணவர்கள் நலன் கருதி, மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

208—

தொழிற்பேட்டை

***1882—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பணிகள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் சிப்காட், அதாவது தொழிற்பேட்டை அமைக்க இடம்

சர்வே செய்யப்பட்டது. பின்னர் இதுகுறித்து எவ்வித முன்னேற்றமும் இல்லை. எனவே மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு மீண்டும் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு அடுத்த ஆண்டாவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். எனது பூம்புகார் தொகுதியில் எவ்வித தொழிற்பேட்டையும் இல்லை; எவ்வித தொழிற்சாலையும் இல்லை. பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை தொடங்கினால் தொழில் முனைவோர் வெளி மாவட்டம் சென்று தொழில் தொடங்குவதைவிட்டு, இம்மாவட்டத்திலேயே தொழில் தொடங்க உதவியாக இருக்கும் என்பதோடு, எங்கள் பகுதியினுடைய பொருளாதாரம் சீரமைவதோடு, எங்கள் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே அடுத்த ஆண்டிலாவது தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலையூரில் சிப்காட்-தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்றாலும், குறைந்தபட்சம் 20-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டத்துடனும், முன்வைப்புத் தொகையுடனும் முன்வருவார்களானால் சிட்கோ நிறுவனம் மாவட்ட தொழில் மையத்துடனும், மாவட்ட ஆட்சியருடனும் கலந்தாலோசித்து தகுந்த நிலத்தைத் தேர்வு செய்து, புதிய தொழிற்பேட்டை தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, திரு. பி.எச்.பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

209—

மின் உற்பத்தி

***12002—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—